
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1045

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

34

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# குதிரைப் பந்தய பெரும்புள்ளிகளுக்குப் பேரிடி!

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவின் டிஜிட்டல் விளையாட்டுத்துறை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. கற்பனை விளையாட்டுகள் மிகப் பெரிய வருமானத்தைத் தரும் துறைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளன. அதற்கு ஓர் உதாரணம் 'ட்ரீம்-11' விளையாட்டு.

கிரிக்கெட் விளையாட்டின் உடனடி நிலவரம் குறித்து, அறிந்துகொள்ளும் ஒரு தளம் பல ஆயிரம் கோடி வருமானம் புரளும் தொழிலாக மாற்றியுள்ளது. ஆனால், பணமும் போட்டியும் இருக்கும் இடத்தில், சட்டச் சிக்கல்களும் போட்டிபோடும் என்பது தவிர்க்க முடியாத உண்மை. இந்த விளையாட்டுகள் திறமைக்கான முறையான போட்டிகளா அல்லது அவை சூதாட்டத்தின் இருண்ட பக்கங்களா என்கிற கேள்வி இந்தப் பத்து ஆண்டுகளில் எழுப்பப்பட்டுள்ளன.

திறன் சார்ந்த செயல்பாட்டுக்கும், வாய்ப்பு விளையாட்டுக்கும் (GAME OF CHANCE) இடையிலான வேறுபாடு பல சட்டச் சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது. இந்தியா முழுவதும் நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்த வண்ணம் உள்ளன.

### இந்திய நீதிமன்றங்கள்

விளையாட்டின் முடிவு பெரும்பாலும் வீரரின் அறிவு, அனுபவத்தைப் பொறுத்தது என்றால், அது அவரின் விளையாட்டுத் திறமை மற்றும் சட்டபூர்வமானது. ஆனால், 'ட்ரீம் -11' போன்ற விளையாட்டுகள் பெரும்பாலும் சூதாட்ட விதிகளைக் கொண்டுள்ளன. இந்தியாவில் சூதாட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு தொடர்பான விவகாரங்களில் உச்ச நீதிமன்றம் இன்னும் முழுமையான தீர்வை எட்டவில்லை. இப்படியான சூதாட்ட வழக்குகளின் முன்னோடி வழக்கு, தமிழ்நாட்டில் நடைபெற்று வந்த குதிரைப் பந்தயத்தை தடை செய்த வழக்கு. இன்றைய 'ட்ரீம்- 11' விளையாட்டுக்கான சட்ட வாதங்களில், குதிரைப் பந்தயம் தடை தொடர்பான வழக்கு வாதங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன என்பது முக்கியமானது.

1996-ஆம் ஆண்டு, டாக்டர் கே.ஆர். லட்சுமணன் எதிர் தமிழ்நாடு அரசு வழக்கில், குதிரைப் பந்தயம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்தது.

குதிரைப் பந்தயத்தில் பந்தயம் கட்டுவது, சூதாட்டமா விளையாட்டா என்கிற அந்த வழக்கில், பந்தயத்தின் முடிவு அதிர்ஷ்டத்தை விட, குதிரையின் பயிற்சி, குதிரையின் பரம்பரை, குதிரை வீரரின் நிபுணத்துவம் மற்றும் பிற காரணிகளால் உருவாகிறது. குதிரையின் மீது பந்தயம் கட்டுவது, பாரம்பரிய அர்த்தத்தில் சூதாட்டமாகிறது, அதே நேரத்தில் திறன் சார்ந்த விளையாட்டுகளுக்கும் வாய்ப்பு சார்ந்த விளையாட்டுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை வரையறுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

குறிப்பாக, குதிரைப் பந்தயத்தைத் திறமை சார்ந்த ஒரு செயலாக அங்கீகரித்ததன் மூலம், அதன் பாரம்பரியத்தைப் பாதுகாத்தது. அதேநேரத்தில் சூதாட்டத்தை தடை செய்த தமிழ்நாடு அரசின் கொள்கையையும் நிலைநிறுத்தியது.

### மெட்ராஸ் ரேஸ் கிளப்

1837-இல் பிரிட்டிஷ் இந்தியா ஆட்சிக் காலத்தில் 'மெட்ராஸ் ரேஸ் கிளப்' உருவானது. அதன்பின்னர், பல்வேறு காலகட்டங்களில் ஏற்ற இறக்கங்களைக் கண்டு, 1900 காலகட்டங்களில் ஜமீன்தார்கள், சினிமா நட்சத்திரங்கள் எனப் பலரும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். 1930 காலகட்டங்களில் பணக்காரர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். பந்தயத்தில் பணம் கட்டி வெற்றிபெற்றவர்களைவிட, பரம்பரைச் சொத்துகள் வரை வைத்து பந்தயம் கட்டி, வாழ்வைத் தொலைத்தவர்கள் ஏராளம். குதிரைகளின் வேகத்துக்கு ஈடாக பணமும் கொட்டியது. பலரின் வாழ்க்கையும் வீழ்ச்சி அடைந்தது.

லாட்டரி சீட்டுக்கு அடிமையாகிக் கிடந்தது போல பலர் குதிரை பந்தயத்துக்கு அடிமையாகிக் கிடந்தனர். இந்த நிலையை மாற்ற, 1949-ஆம் ஆண்டில் மதராஸ் நகர காவல் மற்றும் விளையாட்டு திருத்தச் சட்டம் மூலம் குதிரைப் பந்தய சூதாட்டத்தை தடை செய்ய முயற்சிகள் நடந்தன. அதேநேரத்தில், தமிழ்நாடு சட்டமன்றம் 1949-ஆம் ஆண்டில் குதிரைப் பந்தயத்தை விளையாட்டு (GAMING) வடிவமாக வகைப்படுத்தியது.

இந்த நெருக்கடியை சமாளிக்க, கல்கத்தா ரேஸ் கிளப்பின் கீழ், நிர்வகிக்கப்பட்டு வந்த மெட்ராஸ் ரேஸ் கிளப் , 1950-களில் தனி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கத் தொடங்கியது. அந்த சங்க விதிகளில் கூறப்பட்டுள்ளபடி, கிளப்பின் முக்கிய நோக்கம் குதிரைப் பந்தய நிகழ்வுகளை நடத்தும் தொழிலில் ஈடுபடுவதாகும். மெட்ராஸ் ரேஸ் கிளப் சென்னையில் உள்ள அதன் பந்தய மைதானத்திலும், உதகமண்டலம் (ஊட்டி) பந்தய மைதானத்திலும் பந்தயக் கூட்டங்களை ஏற்பாடு செய்து வந்தன.

1949-ஆம் ஆண்டு 'கேமிங்' சட்டம் இயற்றப்பட்டாலும். இந்தச் சட்டம் 1975-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவில்லை. நாட்டின் பிற பகுதிகளில் குதிரைப் பந்தயம் நடத்தப்பட்டதுடன், கேளிக்கை வரியாக அப்போதே அரசுக்கு 2 கோடி ரூபாய் வருமானத்தைக் கொடுப்பதாக இருந்தது.



ஓவியம் : ரவி பேலட்

தவிர, தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம் தடை செய்யப்பட்டால், அண்டை மாநிலங்கள் தமிழ்நாட்டின் எல்லையையொட்டி, குதிரைப் பந்தயம் நடத்தவும் தயாராக இருந்தன. ஆனால், இந்தச் சிக்கல்களையெல்லாம் துணிச்சலாக எதிர்கொண்டு, ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சிதைத்த சூதாட்டத்தை நிறுத்த முடிவு செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

### அண்ணா பிறந்த நாளில்

1967-ஆம் ஆண்டில் கழகம் முதன்முதலாக ஆட்சிக்கு வந்தபோது, பேரறிஞர் அண்ணாவுக்கு அந்த எண்ணம் எழுந்தது. இதுதொடர்பாக, 1969-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் நிதி மற்றும் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த கே.ஏ.மதியழகன் சட்டமன்றத்தில் பேசிய ஒரு குறிப்பில், "தமிழ்நாட்டில் அண்ணா அவர்கள் குதிரைப் பந்தயத்தை தடை செய்தால், திருப்பதியில் குதிரைப் பந்தயம் நடத்தி, வரி வருவாய் ஈட்டத் தயாராக இருக்கிறோம் என்று ஆந்திர முதல்வர் கூறுகிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும், இரு நூற்றாண்டு சூதாட்டப் பயணத்துக்கு முடிவுரை எழுதியே தீர்வது என 1974-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் முடிவெடுத்தார். 1974-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14-ஆம் தேதி சட்டமன்றத்தில் முதல் துணை மதிப்பீடுகளை வைத்து உரையாற்றிய கலைஞர், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் 'குதிரை பந்தயத்தை அறவே ஒழிப்பது என்று அரசு முடிவு செய்கிறது' என்கிற அறிவிப்பை வெளியிட்டார்.

தமிழ்நாட்டு மக்களின் மனதில் நீண்ட நாள்களாக இருந்து வந்த ஒரு கோரிக்கை, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை சட்டமன்றத்தின் வழியாக நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர். அந்த அறிவிப்பு குதிரைப் பந்தயத்தில் கோலோச்சிய பெரும் புள்ளிகளுக்குப் பேரிடியைக் கொடுத்தது.

...தொடரும்

> **தமிழ்நாட்டு மக்களின் மனதில் நீண்ட நாள்களாக இருந்து வந்த ஒரு கோரிக்கை, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை சட்டமன்றத்தின் வழியாக நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர்.**

## சிறார் பண்பாடும் அரசியலும்...

இந்தியாவில் பன்மைத்துவத்தை சிதைத்துக்கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். எவ்வாறு சிறார்களைப் பயிற்றுவித்துக்கொண்டு இருக்கிறது என விளக்கிய நூல் 'நரக மாளிகை'. ஐந்து வயதில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சிறார் பிரிவில் சேர்க்கப்பட்டு, பின்னர், 25 வயதில் வெளியேறிய கேரளாவைச் சேர்ந்த சுதீஷ் மின்னி எழுதிய நூல்.

இளம் சிறார்கள் மனதில் ஆர்.எஸ்.எஸ். எவ்வாறு நச்சு விதைக்கிறது என்பதை, தன் அனுபவத்தின் மூலம் சுதீஷ் மின்னி விளக்கியிருப்பார். இதுபோன்ற பணியை இடதுசாரிகளும், முற்போக்கு இயக்கங்களும் செய்ய வேண்டும் என முகநூலில் எழுதி இருக்கிறார் இடதுசாரி எழுத்தாளர் முகமது இக்பால்.

"இன்றைக்கு வாட்ஸ் அப், முகநூல், இன்ஸ்டா உள்ளிட்ட சமூக வலைதளங்களில் ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்துக்கான திட்டமிட்ட பிரச்சாரகராகவும், திட்டமிடப்படாத இயல்பான பிரச்சாரகர்களாகவும் இருக்கின்ற தலைமுறை 25 முதல் 30 வயதுக்குள்தான் இருக்கிறார்கள். இந்த அளவில் வலதுசாரி இந்துத்துவா அடிப்படை சக்திகள் மிகப் பல வருடங்களுக்கு முன்பே, இந்தத் தளத்தில் துல்லியமாகச் செயல்பட்டு எதிர்கால தலைமுறையைத் திட்டமிட்டு கைப்பற்றிவிட்டார்கள்.

இடதுசாரி, ஜனநாயக இயக்கங்கள் எந்தத் திசையில் கவனத்தை செலுத்த தவறினார்களோ, எந்த தலைமுறையை பற்றி அதிகமாக கவலைப்படாமல் இருந்தார்களோ அந்தத் தளத்தில் அந்தத் திசையில் சங்பரிவார் திட்டமிட்டு செயல்பட்டு எதிர்கால தலைமுறையைக் கைப்பற்றிவிட்டது. அன்றைய எதிர்கால தலைமுறைதான் இன்றைக்கு நாம் பார்க்கின்ற வலதுசாரி எலக்ட்ரானிக் மீடியா சக்திகள். இடதுசாரி ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராக 24 மணி நேரமும் விலை பேசப்பட்டு அல்லது இயல்பாக இலவசமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சக்திகள்.

இடதுசாரி கலை இலக்கிய பண்பாட்டு அமைப்புகள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்பட்டாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்' என எச்சரிக்கை செய்வதுடன், நம் குடும்பங்களில் சிறாருக்கும் சிறார் பருவத்தைத் தாண்டிய இளைஞர்களுக்கும் ஜனநாயக அரசியல் பண்பாட்டைச் சொல்லித் தந்து வளர்க்க வேண்டிய நிலையில் உள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகக் குடும்பமாக பெருமை!



மு.விஜயகுமார்

2007-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 21-ஆம் தேதி, என் இளைய மகன் ஆகாஷ் பிறந்த நாளின்போது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் பிறந்த நாள் வாழ்த்து பெற, கோபாலபுரம் அழைத்துச் சென்றிருந்தேன். அப்போது நான், அண்ணா அறிவாலயத்தில் தொண்டராகப் பணியாற்றினேன். அம்பத்தூர் நகர 22-வது வட்ட கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றினேன். கலைஞர் அவர்களின் உதவியாளர் மறைந்த அண்ணன் மகாராஜன் அவர்கள் என்னுடன் இருந்தார். என் வழியில் மகனும் கழக விசுவாசத்துடன் செயல்பட்டு வருவது, கழகக் குடும்பமாக பெருமை அளிக்கிறது.

**– மு.விஜயகுமார், 84-வது வட்டக் கழகச் செயலாளர், அம்பத்தூர் கிழக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### நாவலர்-இ.எம்.எஸ்.நம்பூதிரி சந்திப்பு!

1958-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் தேதி கேரள மாநிலம் திருவனந்தபுரம் தி.மு.கழகத்தின் சார்பில் பாலராமபுரம் என்கிற இடத்தில், இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு அன்றைய கழகப் பொதுச் செயலாளர் நாவலர் சென்று உரையாற்றினார். திருவனந்தபுரம் விமான நிலையத்தில் கேரள முதலமைச்சர் தோழர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு - நாவலர் சந்தித்துக்கொண்டனர். அந்த சந்திப்பை தமிழ்நாடு பத்திரிகைகள் பரபரப்பு செய்தியாக வெளியிட்டு இருந்தன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.